## ஜாதிக் கொடுமைகளை எதிர்த்து முறியடிப்போம்!

# ஜாதியற்ற உலகத்தை, புதிய சமுதாயத்தை உருவாக்குவோம் வாரீர்!

## வைக்கம் போராட்ட நூற்றாண்டு நிறைவு விழாவில் – திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள்!

**வைக்கம், டிச.14**

**ஜாதியை அரசமைப்புச் சட்டத்திலே ஒழிக்க வேண்டும் என்று ‘தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு’ மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் பேசினார். அதையே நம்முடைய அரசுகளுக்கு வேண்டுகோளாக நான் முன் வைக்கிறேன். ஒட்டுமொத்த இந்தியாவுக்கும், உலகம் முழுவதும் உள்ளவர்களுக்கும் இந்தக் கோரிக்கையை ஆதரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். வாருங்கள், ஜாதியற்ற உலகத்தை, புதிய சமுதாயத்தை உருவாக்குவோம். அதுதான் நாம் ஏற்கின்ற உறுதிமொழி என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் கூறினார்.**

**தந்தைபெரியாரின்வைக்கம்போராட்டநூற்றாண்டுநிறைவுவிழாகேரளமாநிலம்வைக்கத்தில்நேற்றுமுன்தினம்(12.12.2024)நடைபெற்றது. இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

பார் சிறுத்ததோ, கடல் பெருத்ததோ என்று சொல்லக்கூடியஅளவில், இந்தமாபெரும்வைக்கம் நூற்றாண்டுநிறைவு விழா வெற்றி விழாவாக – தந்தை பெரியார் நினைவிடம், புது தத்துவத்தோடு, நூலகங்களோடு பூத்துக் குலுங்கி காய்த்துக்கனிந்திருக்கின்றஇந்தஅருமையான நிகழ்விற்குத் தலைமையேற்று இருக்கக்கூடிய மாண்புமிகுகேரளமுதலமைச்சர், ‘மார்க்சிஸ்ட் மாடல்' முதலமைச்சர், பெருமைக்கும், சிறப்புக்கும்உரியமாண்பமைபினராயிவிஜயன்அவர்களே,

**திராவிட ஆட்சியினுடைய மகுடத்தில்!**

இந்த வெற்றி விழா என்பது இருக்கிறதே, அந்தவெற்றிவிழாவைஉலகவரலாற்றில்பதிவு செய்வதற்காக – மூன்றாவது பெரிய விழாவாக – இந்த விழாவை நடத்துவதற்கு, எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து, வரலாற்றில், திராவிட ஆட்சியினுடைய மகுடத்தில், ஒரு முத்தாகப்பொதித்திருக்கின்றஎங்கள்ஒப்பிலாத‘திராவிட மாடல்' அரசின் ஒப்பிலாத நாயகர் எங்கள் முதலமைச்சர் மானமிகு மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களே,

இந்த மேடையில் இருக்கின்ற தமிழ்நாடு, கேரள அமைச்சர்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, நாடாளுமன்றஉறுப்பினர்களே, நம்மையெல்லாம் வரவேற்ற தமிழ்நாடு தலைமைச் செயலாளர்அவர்களே, நன்றியுரைகூறவிருக்கக்கூடிய கேரள மாநில தலைமைச் செயலாளர் அவர்களே,

எதிரேவெள்ளம்போல்திரண்டிருக்கக்கூடிய அருமைத்தோழர்கள்அனைவருக்கும்என்னுடையஅன்பானவணக்கத்தினைத்தெரிவித்துக் கொள்கிறேன். வைக்கம் வெற்றி விழாவினுடைய மகிழ்ச்சியால் உந்தப்பட்டு, உங்கள் முன்னால் நிற்கின்றோம்.

(“எந்தாஆனந்தம்மனசிலாயி, எந்தாஆனந்தம் மனசிலாயி" என்று மலையாள மொழியில் கூறினார்). அவ்வளவு பெரிய மகிழ்ச்சிக் கடல்! மக்கள் வெள்ளம் இங்கே சூழ்ந்திருக்கின்றது. வீரம்எங்குபார்த்தாலும்மண்ணிலேபதிந்திருக்கின்றது.

**ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவை நெஞ்செமல்லாம் நிறைந்திருக்கின்றது!**

ஆம்! ஜாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு ஆகியவை நெஞ்செமல்லாம் நிறைந்திருக்கின்றது. அதிகம் பேசவேண்டிய அவசியமும் இல்லை; அதற்கு நேரமும் இல்லை. நம்முடைய அமைச்சர் பெருமக்கள், நம்முடைய பொதுப் பணித் துறைஅமைச்சராகஇருந்தாலும், செய்தித்துறை அமைச்சராகஇருந்தாலும், அரசுஅதிகாரிகளாக இருந்தாலும், எல்லோருடைய ஒத்துழைப்பு – இரண்டுஅரசுகளுடையஒத்துழைப்புஅவ்வளவும்மலர்ந்து, மிகச்சிறப்பானவரலாற்றில், ஒரு நூறாண்டுஅல்ல–பன்னூறாண்டுகள்பேசக்கூடியவரலாறாகஇந்தவைக்கம்போராட்டவெற்றி வரலாறு அமைந்திருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சிக்கு நாங்கள் வந்திருப்பது – திராவிடர் கழகம் –தந்தைபெரியார்அவர்கள், இதேஇடத்தில்தான், நூறாண்டுகளுக்கு முன்பாக, நம்மைப் போன்றவர்கள் பிறக்காத காலத்தில், ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பதற்காக, கேரளத்துத் தோழர்கள் பெருமைக்குரிய டி.கே.மாதவன் அவர்களுடைய முன்னெடுப்பால், கே.பி.கேசவமேனன், குரூர் நீலகண்டன் நம்பூதிரி அவர்கள், ஜார்ஜ்ஜோசப்அவர்கள்எல்லாம்இணைந்து நடத்திய அந்தப் போராட்டத்தை, அன்றைய அரசு, அடக்கியது, ஒடுக்கியது, சிறைச்சாலைக்கு அனுப்பியது.

அதே நூறாண்டு காலம், நியாயங்கள் இருந்தால், அந்தப் போராட்டங்கள் தோற்பதில்லை. சமூகநீதிஎன்றைக்கும்வெல்லும்–ஒருபோதும் சமூகநீதியை யாராலும் தோற்கடிக்க முடியாது.

சமூகநீதி எப்படிப்பட்ட வெற்றியைப் பெற்றிருக்கின்றது என்பதற்கு, பெரியார் நினைவகம் – நூலகத்தினை திறந்து வைத்தனர் இரண்டு முதலமைச்சர்களும்.

இதில் அரசியல் மாறுபாட்டிற்கோ, வேறுபாட்டிற்கோ இடமில்லாமல், எல்லோரும் ஒன்றுபட்டு, ஜாதியையும், தீண்டாமையையும்,



நெருங்காமை – உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் கேள்விடப்படாத, காட்டுமிராண்டித்தனமான ஒரு தத்துவம், ஒரு மதத்தின் பெயரால், ஸநாதனத்தின்பெயரால், மிகப்பெரியவைதீகத்தின்பெயரால், நெருங்காமை, பாராமை. வெளி நாட்டுக்காரர்கள் இன்னமும் விளங்கிக் கொள்ளாமல் கேட்கிறார்கள், அது என்ன Untouchability, Unseeability, Unapproachabilityஎன்று.

**பெரிய மாறுதலை உருவாக்கிற்று!**

அப்படிப்பட்டவற்றையெல்லாம்எதிர்த்துஒரு போராட்டம் நடத்தி, அந்த வெற்றி நூறாண்டுகளுக்கு முன்பு, தந்தை பெரியார் என்ற மாபெரும் தலைவர், எங்கே அந்தப் போராட்டம்சிறைச்சாலையோடுமுடிந்துவிடுமோ என்றுநினைத்தநேரத்தில், ஒருகடிதம், ஒருசாதாரண கடிதம் – சிறைச்சாலையிலிருந்து அனுப்பப்பட்ட அந்தக் கடிதம், ஒரு பெரிய மாறுதலை உருவாக்கிற்று.

தந்தைபெரியார்அவர்கள், ஈரோட்டிலிருந்து விரைந்தார். இங்கே(கேரளத்தில்)வீறுகொண்டு எழுந்தது அந்தப் போராட்டம். அதனுடைய வெற்றி விழாதான் இன்றைக்கு இங்கே நடைபெறுகிறது.

விழாவிற்கு நாங்கள் இங்கே வந்துள்ளோம் – நமது மக்களின்மீது திணிக்கப்பட்ட ஜாதி தீண்டாமையை எதிர்த்து நீங்கள் செய்த முயற்சிகளுக்கு நன்றி சொல்ல.

எங்கள் இயக்கம், வைக்கம் இயக்கம், பெரியாரின் இயக்கம், திராவிட இயக்கம், இந்த வழிகளில் ‘மனிதாபிமான' நோக்கமாக இருக்க வேண்டும். மனிதாபிமானமற்றதிலிருந்து மறுபடியும் மனிதாபிமானத்திற்கு மாற்றுவது – அதுவேஇந்தமிகப்பெரும்இயக்கத்தின்வெற்றி, அதுவே அடையாளம்.

**இந்த மாபெரும் இயக்கத்தின் வெற்றி!**

நீங்கள் செய்த முயற்சிகளுக்கு நன்றி தெரிவிக்கநாங்கள்இங்குவந்துள்ளோம். ஏனெனில் ஜாதியும், தீண்டாமையும்நம்மக்களைமனிதத் தன்மையற்றவர்களாக்குகிறது. ஆனால், நமது இயக்கம், வைக்கம் போராட்டம், பெரியாரின் இயக்கம், திராவிட இயக்கம், தம் வழிகளில் மனிதநேயத்தைவளர்க்கவும், மனிதத்தன்மை அற்றநிலையிலிருந்து(dehumanize), மீண்டும் மனிதத் தன்மைக்குக் (rehumanize) கொண்டு வரப்போராடுகிறோம். அதுதான்இந்தமாபெரும் இயக்கத்தின் வெற்றி.

இதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி சொல்லஎங்களிடம்வார்த்தைகள்இல்லை. இந்தப்போராட்டம்தொடரவேண்டும், அதுவேநமது செய்தி! ஜாதி ஒழிப்புக்காகவும் தீண்டாமைக்கு எதிராகவும் பல போராட்டங்களில் நாம் வெற்றி பெற்றுள்ளோம்.

அன்றுஜாதியின்கொடுமைவெளிப்படையாகத் தெரிந்தது (patent); இன்று அவை மறைமுகமாக (latent) நடக்கின்றன. எந்த வடிவத்தில் ஜாதிக் கொடுமைகள் நிகழ்ந்தாலும் அதை நாம் எதிர்த்து முறியடிப்போம்.

ஜாதியை அழித்தொழிப்போம். நாம் இங்கு போராட வந்துள்ளோம். இன்று நாம் அறைகூவல் விடுக்கிறோம். கேரளா, தமிழ்நாடு உள்ளிட்டநாட்டின்அனைத்துபகுதிகளையும்சார்ந்த இளைஞர்களுக்கு நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இந்தக்கட்டுமானம்என்பதுமூன்றுவிதமான மிகப்பெரிய வரலாற்றுச் சின்னம்.

**‘திராவிட மாடல் – மார்க்சிய மாடல் – காந்திய மாடல்!’**

‘திராவிட மாடல் – மார்க்சிய மாடல் – காந்திய மாடல்!'எல்லாம்சேர்ந்துஇங்கேசத்தியாக்கிரகம் எப்படி பயன்பட்டு இருக்கிறது என்பதைக் காட்டியிருக்கிறீர்கள்.

எனவே, எங்களுடையதலைதாழ்ந்தவணக்கத்தை, உலகெங்கும்இருக்கக்கூடியபெரியாரியஸ்டுகள் மட்டுமல்ல, பகுத்தறிவாளர்கள் மட்டுமல்ல, நாத்திகர்கள் மட்டுமல்ல, மனிதாபிமானிகள் மட்டுமல்ல எல்லோரும் அதைக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தப் போராட்டத்தினை இரண்டு மாநிலங்களுடைய வெற்றியை முதலமைச்சர்கள் கொண்டாடுகிறார்கள்ஓராண்டுகாலமாக. மூன்றாவதுநிகழ்ச்சியாகஇந்தநிகழ்ச்சிநடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

எங்கள்முதலமைச்சர்அவர்கள், அங்கேயும், இங்கேயும்சிறப்பாகவரலாற்றினுடையபொன்னேடுகளைஅடுக்கிக்கொண்டேபோகிறார்கள். அதுதான் அவருடைய ஆட்சியினுடைய சிறப்புக்குச்சிறப்புக்குச்சிறப்புஎன்றுசொல்லக்கூடிய அளவிற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

எனவே, ஒரே ஒரு விண்ணப்பம்தான்.

ஜாதி ஒழிப்பு என்ற பொதுவான இலக்கை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம். பெரியார்தனது94ஆவதுவயதில்இறுதியாகநடத்திய“தமிழர்சமுதாயஇழிவு ஒழிப்பு" மாநாட்டில் பேசும்போது, “அனைத்து அரசுகளுக்கும்ஓர்ஆலோசனையைவேண்டுகோளாக விடுத்தார்: அது எந்த அரசாக இருந்தாலும், எந்த வண்ணமாக இருந்தாலும், அரசமைப்புச்சட்டத்திலேஜாதியைஒழிக்கவேண்டும்" என்றார். “அதை நம்முடைய அரசுகளுக்கு வேண்டுகோளாக நான் முன் வைக்கிறேன்" என்றார்.

இதுபெரியாரின்வேண்டுகோள், பெரியாரின் கோரிக்கை; பெரியாரின் விண்ணப்பம். அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 17–இன் படி “தீண்டாமைஒழிக்கப்பட்டுவிட்டது"என்றுஇருக்கிறது. அதில்‘தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது' என்பதற்குப் பதிலாக, “ஜாதி ஒழிக்கப்பட்டுவிட்டது" என்றுமாற்றப்படவேண்டும். சட்டத்தின்படிஜாதி ஒழிக்கப்பட வேண்டும். அதற்கு நாம் போராட வேண்டும்.

ஏனெனில், ஜாதி என்பது தான் நிரந்தரத் தீமை. தீண்டாமைஎன்பதுஜாதியின்விளைவு.

ஜாதியைஒழித்துவிட்டால்தீண்டாமைதானாகப் போய்விடும். வேர் அறுந்துவிட்டால், பிறகு தானாகக்கிளை வெட்டப்படும். அதுதான் மூலப் பிரச்சினை. சிறப்புக்குரிய பங்கேற்பாளர்களே, இதன்மூலம்ஒட்டுமொத்தஇந்தியாவுக்கும், உலகம் முழுவதும் உள்ளவர்களுக்கும் இந்தக் கோரிக்கையைஆதரிக்கவேண்டும்என்றுநாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

வாருங்கள், ஜாதியற்றஉலகத்தை, புதியசமுதாயத்தை உருவாக்குவோம். அதுதான் நாம் ஏற்கின்ற உறுதிமொழி. அதுவே நமது சிந்தனை, அதை நோக்கி, நாம் செல்ல வேண்டும். நாம் பல களங்களில் வெற்றி பெற்றுள்ளோம், ஆனால், போர்இன்னும்முற்றுப்பெறவில்லை. போர்வீரர்களாக உறுதியேற்போம். அதற்காகவேஇந்தமேடை. அதுவேநமதுஉறுதிமொழி.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் உரையாற்றினார்.

## ஒழுங்கு நடவடிக்கை!

### தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 113வது வட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி பிரேமா சுரேஷ் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 12.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## தமிழ்நாடு முதல்வர் வழங்கிய நிவாரணப் பொருட்கள்!

### நெட்டப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த குடும்பங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார் !

புதுச்சேரி, டிச. 14 –

தமிழ்நாடு முதல்வர் வழங்கிய நிவாரணப் பொருட்களை புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெட்டப்பாக்கம் தொகுதி பனையடிக்குப்பம், பண்டசோழநல்லூர் கிராமங்களில் உள்ள குடும்பங்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், மாநில கழக அமைப்பாளருமான இரா.சிவா கலந்துகொண்டு புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தி.மு.க, பொருளாளர் இரா. செந்தில்குமார், எம்.எல்.ஏ., தொகுதி செயலாளர்கள் நெட்டப்பாக்கம் சக்திவேல், உருளையான்பேட்டை சக்திவேல், ஆதிதிராவிடர் நலக் குழு துணை அமைப்பாளர்கள் தேவேந்திரன், திருநாவுக்கரசு, கிளை கழக செயலாளர்கள் பாலு, ராமமூர்த்தி, தொகுதி பிரதிநிதி செல்வம் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டார்கள்.



புதுக்கோட்டை மாவட்ட வழக்கறிஞர் சங்கம் சார்பில் மாநில அளவிலான கிரிக்கெட் போட்டி மாமன்னர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. கிரிக்கெட் போட்டியில் சென்னை, மதுரை,சேலம், நாமக்கல், திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட 16 அணிகள் கலந்து கொண்டன. போட்டியில் முதல் பரிசை மதுரை அணி வென்றது. முதல் பரிசு வென்ற அணிகளுக்கு ரூ.50,000, மற்றும் சுழல் கோப்பையை சட்டத்துறை அமைச்சர் எஸ் ரகுபதி வழங்கினார்.இரண்டாம் பரிசு வென்ற அணிகளுக்கு ரூ.40,000,மற்றும் சுழல் கோப்பையை புதுக் கோட்டை திமுக வடக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கே கே செல்ல பாண்டியன் வழங்கினார்.நிகழ்வில் அரசு வழக்கறிஞர் பூங்குடி எம்.சிவக்குமார், மூத்த வழக்கறிஞர் ஏ. சந்திரசேகரன், வழக்கறிஞர் சங்க தலைவர் சின்னராஜ், வழக்கறிஞர் சங்க நிர்வாகி பரமசிவம், சங்க பொருளாளரும் கிரிக்கெட் கமிட்டியின் தலைவருமான வி. சுரேஷ்குமார், பாரூக் அலி, ரகுபதி, கண்ணன், மலர்மன்னன் உள்ளிட்ட வழக்கறிஞர் சங்க கிரிக்கெட் கமிட்டியினர் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

### கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதியில் –

## துரிஞ்சலாற்றின் குறுக்கே தடுப்பணை!

### பேரவையில் – பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வலியுறுத்தல்!

*சென்னை, டிச. 14 –*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் கோணலூறில் துரிஞ்சாறு குறுக்கே தடுப்பணை அமைத்திட வேண்டும் என்று பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி வலியுறுத்தினார்.



இது குறித்த விவாதம் வருமாறு:

**பேரவைத் துணைத் தலைவர் கு. பிச்சாண்டி:** என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியிலே துரிஞ்சலாறு என்ற ஓர் ஆறு ஓடுகிறது. அதற்கு ஏற்கெனவே சட்டமன்றத்திலே கோணலூறிலே ஒரு தடுப்பணை கட்டுவதாக அறிவித்திருந்தார்கள்.

ஆனால், இதுவரை அது கட்டப்படவில்லை. அதனால் இந்த மழையிலே அதிகளவு அந்தத் துரிஞ்சலாறு பாதிக்கப்பட்டிருப்பதால், அந்தப் பகுதியிலே தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**அமைச்சர் துரைமுருகன்:** மழையைத் தடுப்பதற்கு தடுப்பணை கட்டினால் போதுமென்று சொல்கிறார். இந்தக் காலத்தில் வருகின்ற மழையைப் பார்த்தால் தடுப்பணை அல்ல அணையே நிற்கவில்லை. இருந்தாலும், அந்த ஊரின் நிலைமை எனக்குத் தெரியும். எனவே மாண்புமிகு உறுப்பினர் கு. பிச்சாண்டி அவர்களின் கோரிக்கையை அரசு serious ஆக எடுத்துக் கொண்டு கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.




திருச்சி விமான நிலையம் அருகே உள்ள மொரைஸ் கிளாரியான் பொழுதுபோக்கு மையத்தில் நடைபெற்ற ஒலி ஒளி குறுந்தகடு தயாரித்து வெளியீட்டு நிகழ்விற்கு திருச்சி கிழக்கு மாநகர கழக செயலாளர் மு.மதிவாணன் தலைமையில் திருச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும் பள்ளிகல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு பாடல் குறுந்தகடை வெளியிட்டார். கழகத் தலைமை நிலையச் செயலாளரும் வீட்டு வசதி வாரியத் தலைவருமான எஸ்.பூச்சி முருகன் குறுந்தகடை பெற்றுக்கொண்டார்.